[25th October 1971

Incentive Special Pay

* 32 Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(a) whether incentive Special pay for First Grade Tamil Pandits who acquire the M.A. Degree has not been granted to any one in the Ramanathapuram district; and

(b) if so, the reasons thereof?

ஊக்கச் சிறப்புச் சம்பளம்.

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் எம். ஏ. பட்டம் பெற்ற முதல்தர தமிழ்ப் பண்டிதர்கள் யாருக்கேனும் ஊக்கச் சிறப்புச் சம்பளம் Incentive Special Pay வழங்கப்படாமலுள்ளதா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) பதவியில் நியமிக்கப்பட பி.டி தேர்ச்சி பெற்றிருக்கவேண்டிய 1-ம் நிலைத் தமிழாசிரியர்கள் எம்.ஏ. பட்டம் பெற்றால் இரண்டு ஊக்க ஊதிய உயர்வு கொடுக்கலாம் என 22-6-1971 அன்று அரசு ஆணை யிட்டுள்ளது. பி.டி. தேர்ச்சி பெறாமலேயே தற்சமயம் பதவியில் உள்ள 1-ம் நிலைத் தமிழாசிரியர்களுக்கு, பி.டி. தேர்ச்சி பெற்றால் மட்டுமே மேற்கூறிய ஊக்க ஊதிய உயர்வு தரப்படும். ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள முதல் நிலைத் தமிழாசிரியர்களைப் பொறுத்த நிலையும் இதுவே.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, இந்த ஊக்க சிறப்பு ஊதியம் இப்போது எல்லா எம்.ஏ. பட்டதாரிக்கும் உண்டு இரண்டாவது சம்பளக் கமிஷனுக்குப் பிறகு, புதிய திருத்தப்பட்ட சம்பள விகிதம் வந்த பிறகும், எம்.ஏ. பட்டதாரிகளுக்கு பி.டி. பட்டம் பெற்றிருந்தால், இரண்டு இங்கிரிமெண்ட் ஊக்கச் சிறப்புச் சம்பளம் எல்லோருக்கும் கிடைக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பி.டி. பட்டம் பெற்றிருந்தால் ஊதிய உயர்வு உண்டு, பெறாவிட்டால் ஊதிய உயர்வில்லை என்று விதிமுறை இருக்கிறது. அந்த அளவில்தான் பி.டி. ஆசிரியர்கள் உயர்நிலைத் தலைமையாசிரியர்கள் எம்.ஏ. எம். எஸ்ஸி. படித்திருந்தால் இரண்டு ஊதிய உயர்வும், அதற்கு மேல் எம்.ஏ., பி.டி. படித்தால் இரண்டு ஊதிய உயர்வு என்றும் இருக்கிறது. பி.டி. தேர்ச்சி பெறாவிட்டால், எம்.ஏ.க்கான இரண்டு ஊதிய உயர்வு கிடைக்கும். எம்.இடி. படித்தால் மேலும் ஊதிய உயர்வு கொடுக்கப்படும். பி.டி. படிக்காமல் எம்.ஏ. படித் திருந்தால், அவர்களுக்கு ஊதிய உயர்வு இல்லை.

திரு. எஸ். முத்துசாமி : ஊக்க ஊதிய உயர்வு என்பது பி.ஏ., பி.டி. பெற்றவர்களுக்கும் புலவர் பட்டம் பெற்றவர்களுக்கும் மட்டும்தானு, ஹையர்கிரேடு, செகண்டரி கிரேடு ஆசிரியராக இருந்து எம்.ஏ. படித்தால் சிறப்புப் பயிற்சி பெற்றவர்களுக்கும் அந்த ஊதிய உயர்வு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும். இப்போது பி.டி. படித்தவர்களுக்குத்தான் ஊக்க ஊதிய உயர்வு தருகிற முறை இருக்கிறது. செகண்டரி கிரேடு படித்து எம்.ஏ. படித்தால் அதற்கு ஊதிய உயர்வு இருக்கிறதா என்பதை அறிய தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. எஸ். முத்துசாமி : அதை அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி விண்ணப்பம் வந்தால், ஆராய்ந்து முடிவே மேற்கொள்ளலாம்

திரு. எஸ். முத்துசாமி : ஏற்கனவே மதுரை மகாநாட்டில் கலந்துகொண்டபோது கல்வி-உள்ளாட்சி அமைச்சர் அவர்கள் இன்சென்டிவ் இங்கிரிமெண்ட் பற்றி முடிவெடுக்கப்படும் என்று கூறியிருப்பதாலும், இதுவரை இல்லாமல் இருப்பதாலும், அதை அரசு கவனித்து ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தனிக் கேள்வி போட வேண்டும்.

Project Allowance

* 15 @ *Q.*—THIRU G. SWAMINATHAN (on behalf of Thiru V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Agriculture Department Ministerial Association, Nilgiris Centre, Ootacamund has requested the Government for the grant of project allowance; and

(*b*) if so, the action taken thereon?

திட்ட படி

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. வி. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உதகையிலுள்ள, நீலகிரி வட்ட, தமிழ்நாடு வேளாண்மைத் துறை நிலைப் பணியாளர் சங்கம் திட்டப்படி வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

---

a Postpond from the List of questions for 22nd October 1971.